# 3

# பவுலின் கண்களின் வழியாக

## (பிலிப்பியர் 1:12-20)

"வாழ்வு உங்களுக்கு ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுக்கும்போது, எலுமிச்சம்பழச் சாற்றைச் செய்யுங்கள்" என்ற பழமொழியை ஒருவேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். விவரிப்பு தெளிவாக உள்ளது: எழுமிச்சம்பழம் தன்னில்தானே புளிப்பாக உள்ளது, ஆனால் சிறிதே எலுமிச்சம் பழச்சாறு குளிர்ந்த நீருடன் கலக்கப்பட்டு, அதில் சர்க்கரை போடப்பட்டு எழுமிச்சம்பழச் சாறாக்கப்படும்போது, அது புத்துணர்ச்சியூட்டும் பானமாகிறது. ஒப்புவமை ஏற்புடையதாக உள்ளது. சில வேளைகளில், வாழ்வானது நமக்கு - வெறுப்புச் சுவையூட்டும் சூழ்நிலைகள் என்ற "எலுமிச்சம்பழங்களைக் கையளிக்கிறது." அது நடக்கும்போது, அந்தச் சூழ்நிலையைச் சகித்துக்கொள்ள மட்டும் நாம் முயற்சி செய்யக் கூடும் அல்லது நாம் அதிலுள்ள நன்மையைக் கண்டறிய முயற்சி செய்யக் கூடும்: நமது "எலுமிச்சம்பழங்களை" நாம் "எலுமிச்சம்பழச் சாறாக்க" முடியும்.

பவுல் இந்தப் பழமொழியைக் கேள்விப்பட்டிருக்க மாட்டார், ஆனால் அவர் இதற்குப் பின் உள்ள தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவரானதில் இருந்து, அவருக்கு "பாரவண்டிகள் சுமையளவுக்கு எலுமிச்சம்பழங்கள்" கையளிக்கப்பட்டிருந்தன. நடபடிகள் புத்தகம் அவர் தவறாக நடத்தப்பட்ட விஷயங்களில் சிலவற்றைப் பதிவு செய்துள்ளது (காண்க நடபடிகள் 9:1-23:11), ஆனால் அது, கர்த்தருக்காக அவர் பொறுமையுடன் சகித்துக் கொண்டவற்றில் ஒரு சிறு துணுக்காக மாத்திரமே இருந்தது (காண்க 2 கொரிந்தியர் 11:23-30). தவறாக சிறைவைக்கப்பட்டிருத்தல் என்பது அவரது அப்போதைய சிறுமைப்படுத்தப்படுதலாக இருந்தது. அவர் செசரியாவில் இரண்டு ஆண்டுகளைச் செலவிட்டிருந்தார் (காண்க நடபடிகள் 23:12-26:32). செசாருக்கு அபயமிட்ட பின்பு (நடபடிகள் 25:10-12), அவர் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டிருந்தார் (காண்க நடபடிகள் 27:1-28:15). பிலிப்பியருக்கு நிருபத்தைப் பவுல் எழுதியபோது, அவர் ஏற்கனவே அந்த நகரில் இரண்டு ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்தார் (நடபடிகள் 28:30; காண்க 28:16-31). (இந்த நிருபம் ரோமாபுரியில் பவுல் முதன்முறை சிறை வைக்கப்பட்டிருந்த வேளையின் முடிவுக்கு அண்மையில் எழுதப்பட்டது என்பதை, பவுல் விரைவில் தாம் விடுதலை செய்யப்பட எதிர்பார்த்திருந்தது உட்பட [2:24], இந்த நிருபத்தில் உள்ள பல விபரங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன.)

*பிரசங்கியார் என்ற வகையில்* ரோமாபுரிக்குச் செல்ல அவர் ஏங்கியிருந்தார் (ரோமர் 1:10, 11, 13; 15:22-24); அதற்குப் பதிலாக அவர் அங்கு ஒரு *கைதியாக* இருந்தார்! அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மற்றவர்கள் சுயபச்சாதாபத்தால் நிரப்பப்பட்டிருக்கலாம் என்றிருக்கையில், பவுலுக்குள் எவ்வித கசப்பும் இருந்ததாக நமது வேதவசனப் பகுதி குறிப்பெதுவும் கொண்டிருப்பதில்லை.

பவுல் தமது "எழுமிச்சம்பழங்களை" எடுத்து "எலுமிச்சம்பழச் சாறாக்க" முடிந்தது எவ்வாறு? இதற்குப் பதிலானது, அவருக்கு நடந்த எல்லாவற்றைக் குறித்தும் அவரது *எண்ணப்போக்கில்* அமைந்து கிடக்கிறது. ஆம், சரியான சிந்தையை [எண்ணப்போக்கை] மேம்படுத்திக் கொள்ளுதலின் முக்கியத்துவம் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம், ஆனால் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் பற்றிய நமது படிப்பில், அதை நாம் திரும்பத் திரும்பத் கேள்விப்படுவோம். ஒரு கருத்தமைவில் இந்தப் புத்தகம், ஏற்புடைய சிந்தையின் [எண்ணப்போக்கின்] அவசியம் பற்றியதாக உள்ளது:

> கிறிஸ்து இயேசுவிலிருந்த *சிந்தையே* உங்களிலும் இருக்கக்கடவது (2:5; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

> ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் *சிந்தையாயிருக்கக்கடவோம்* (3:15அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

> கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ *அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்* (4:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

பவுலை நீங்கள் ரோமாபுரியில் கண்ணோக்கியிருந்தால், முதிர் வயதான ஒரு பிரசங்கியார், விலங்குகளில் கட்டப்பட்டு இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பிலேமோன் 8, நடபடிகள் 28:20 மற்றும் எபேசியர் 6:19 ஆகிய வசனங்களை வாசியுங்கள். இவற்றில் இரு வசனப்பகுதிகளில் "கட்டு" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (halusis) "கைதியின் மணிக்கட்டு, அவர் தப்பிச் செல்லுதலை இயலாத செயலாக்கும் வகையில் அவரைக் காவல் செய்யும் போர்வீரரின் மணிக்கட்டுடன் இணைத்துக் கட்டப்பட்டிருக்கும் ஒரு குறுகிய நீளம் கொண்ட சங்கிலி" என்று அர்த்தப்படுகிறது.[1] பவுலுக்கு இருந்த கட்டுப்பாடுகளைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கையில், பரிதவிப்பிலும் கோபத்திலும் நீங்கள் உங்கள் தலையைக் குலுக்கும்படி சோதிக்கப்படலாம். இருப்பினும் காணப்படுபவற்றில் இருந்து காணப்படாதவற்றை நோக்கி உங்கள் கவனத்தை மாற்றுங்கள்: பவுலின் இருதயம், பவுல் தமது சூழ்நிலையைக் கண்ணோக்கிய போது, அவர் துன்பத்தை அல்ல ஆனால் வெற்றியையே கண்டார். அவர் தம்மைப் பற்றி, தீங்கிழைக்கப்பட்டவர் என்று எண்ணாமல், வெற்றியாளர் என்றே நினைத்தார்.

இந்தப் பாடத்தில், அப்போஸ்தலரின் கண்கள் வழியாகக் கண்ணோக்குதல் அதாவது சூழ்நிலைகளை அவர் கண்டவிதமாகக் காண்பது என்பது நமது அறைகூவலாக இருக்கும். அவ்வாறு செய்வதில் ஒருவேளை, நீங்களும் நானும், வாழ்வை நேர்மறையாக கண்ணோக்குதல் பற்றிய சில விஷயங்களைக் கற்றுக்கொள்வோம்.

## அவர் தேவனுடைய நோக்கத்தின் வளர்நிலையைக் கண்டார் (1:12-14)

*பவுலின் நிருபத்தினுடைய பொருள் பகுதியை நாம் அடைந்திருக்கிறோம். நிருபத்தின் பொருள் பகுதியை, அதை எழுதுபவர் எவ்வாறெல்லாம் அலைக்கழிக்கப்படுகிறார் என்பது உட்பட, ஒரு சொந்தக் குறிப்புடன் தொடங்குதல் என்பது வழக்கமான ஒன்றாக இருந்தது. ஒரு வகையில் பவுல், இந்த நிருபத்தின் பொருள் பகுதியை ஒரு சொந்தத் தகவலுடன் தொடங்கினார் ... ஆனால் உண்மையில் அது அவ்வாறில்லை. அவர் தமது கண்களைத் தம்மீது அல்ல ஆனால் இயேசுவின் மீதும் இயேசுவின் சுவிசேஷத்தின் மீதும் வைத்திருந்தார்.*

*அவர், "சகோதரரே, ... நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" என்று தொடங்கினார் (வசனம் 12). "சகோதரர்" மற்றும் "சகோதர சகோதரிகள்" என்ற வார்த்தைகளைப் பவுல் விரும்பினார். இவைகள் ஒரு குடும்ப உறவைச் சுட்டிக் காண்பிக்கின்றன. அவ்வார்த்தைகள் அவரது நிருபத்தில் 130 அல்லது அதற்குச் சற்றேக் குறையலான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இந்தக் குறுகிய தொகுப்பின் நான்கு அதிகாரங்களில் ஒன்பது முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன (வசனம் 12, 14; 2:25; 3:1, 13, 17; 4:1, 8, 21).*

*அவர் தொடர்ந்து, "எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று ..." எழுதினார். "எனக்குச் சம்பவித்தவைகள்" என்ற சொற்றொடர், பவுல் கடந்த காலத்தில் பாடுகளாக அனுபவித்தவை மற்றும் [இந்த நிருபம் எழுதப்பட்ட] நிகழ்காலத்தில் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தவை ஆகிய யாவற்றையும் உள்ளடக்குகிறது. அவை யாவற்றையும் அவர் பின்வரும் இரண்டே இரண்டு வார்த்தைகளினால் விரைவில் நீக்கிப்போட்டார்: "எனக்குச் சம்பவித்தவைகள்."*

*அவரது சிந்தையானது பிரச்சனைகள் மீதல்ல ஆனால் வளர்ச்சியின் மீதே கவனம் குவித்திருந்தது: "சுவிசேஷம் பிரபலமாகும்படி." "சுவிசேஷம்" என்ற வார்த்தை, "நற்செய்தி" என்று அர்த்தப்படுகிற* euangelion *என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*அப்போஸ்தலர், சுவிசேஷம் பிரபலமாகுதல் பற்றிப் பேசியபோது, அவர் சித்தரிப்புள்ள ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார். "பிரபலம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "முன்னோக்கி வெட்டுதல்" என்று அர்த்தப்படுகிற வினைவடிவத்தைக் (*prokoptein*) கொண்ட (*prokope *என்ற) கூட்டு வார்த்தையில் இருந்து வந்ததாக உள்ளது.[2] "தொடக்கத்தில் இவ்வார்த்தை, முன்னோடி ஒருவர் புதர்க்காடுகளினூடே வழியுண்டாக்க வெட்டிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டது."[3] இவ்வார்த்தை, படைக்கு முன்னால் சென்று, மரங்களையும் படைமுன்னேறிச் செல்லுதலைத் தாமதப்படுத்தும் செடிகொடிகளையும் வெட்டிச் செல்லும் படையின் பொறியாளர்களின் நடவடிக்கையை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்டது.[4] இது அடிக்கடி புதிய எல்லைப் பகுதிகளைத் திறந்து வைத்தது.[5] பவுல் சிறைவைக்கப்பட்டிருத்தல், சுவிசேஷத்திற்காக "வழியைச் செவ்வை" செய்தலாக இருந்தது!*

## இழந்துபோகப்பட்டிருந்தவர்களுடன் தொடர்பு

*பவுல், தாம் சிறைவைக்கப்பட்டிருந்ததன் காரணமாக சுவிசேஷம் பிரபலமானதற்கு இரண்டு உதாரணங்களைக் கொடுத்தார். முதலாவது, இழந்துபோகப்பட்டிருந்தவர்களுடன் தொடர்பு என்பதாக இருந்தது. பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டது முதற்கொண்டு, சுவிசேஷ ஊழியம் செய்யும் குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை அனுபவித்திருந்தார். அவர் யூதசங்கத்தார்களுக்கு, ரோமானிய ஆளுநர்களுக்கு மற்றும் ஒரு அரசர் உட்பட, உயர்பதவியில் இருந்த அதிகாரிகளுக்குப் பிரசங்கித்திருந்தார் (நடபடிகள் 23:1; 24:10, 24, 25; 25:23; 26:1). இருப்பினும் இந்த வாய்ப்புகளில் எதுவும், பவுல் ரோமாபுரியில் படைவீரர்களுக்கு சங்கிலியால் கட்டப்பட்டிருக்கையில் அளிக்கப்பட்ட வாய்ப்பைக் காட்டிலும் அதிகம் பலனுள்ளதாக இருந்திருக்கவில்லை (காண்க நடபடிகள் 28:16). "சுவிசேஷம் பிரபலமாகுதல்" பற்றிப் பேசியபின்பு (பிலிப்பியர் 1:12) அவர், "அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் [praetorian guard] மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி" என்று கூறினார் (வசனம் 13).*

*"Praetorium" என்பது "praetorian guard" என்ற கிரேக்கச் சொற்றொடரின் ஆங்கிலப்படுத்தப்பட்ட வடிவமாக இருக்கும். சிலர், இது பேரரசின் அரண்மனையைக் குறிக்கிறது என்று நினைக்கின்றனர் (KJV யில் காணவும்). சுவிசேஷமானது இராயனின் அரண்மணை சென்றடைந்தது என்பது உண்மையாக இருக்கையில் (4:22), 1:13ல் பயன்படுத்தப்பட்டுள்ளபடி இவ்வார்த்தை அரண்மனைக் காவலர்களைக் குறிக்கிறது என்று பெரும்பான்மையான கல்வியாளர்கள் நம்புகின்றனர். இந்தச் சிறு குழுவான போர்வீரர்கள், ரோமானியப்படையில் மிகவும் நேர்த்தியான படைப்பிரிவாக இருந்தனர்.[6] அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாயிரம் இத்தாலியத் துருப்புகளாக இருந்தனர், இவர்கள் யாவரும் நூற்றுக்கு அதிபதியின் (நூறு போர்வீரர்கள் மீது அதிகாரம் கொண்ட ஒரு அலுவலர்) தகுதிக்கு இணையான பதவி ஒன்றைக் கொண்டிருந்தனர். மற்ற கடமைகளுடன், இவர்கள் பேரரசரின் மெய்க்காவலர்களாக இருந்தனர். இவர்கள் ரோமாபுரியில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியிருந்தனர் மற்றும் பிற்பாடு ரோமப்பேரரசின் அரசர்களை ஏற்படுத்துபவர்கள் ஆயினர். இவர்கள், இரட்டை ஊதியம் மற்றும் ரோமாபுரியில் தங்களுக்குச் சொந்தமான வீடு ஆகியவை உட்பட, விசேஷித்த சலுகைகளைக் கொண்டிருந்தனர். பன்னிரெண்டு முதல் பதினாறு ஆண்டுகள் வரையில் பணியாற்றிய பின்பு, இவர்கள் ஓய்வுபெற்ற போது, இவர்களுக்கு ரோமக்குடியுரிமையும் தாராளமான நிதியும் தரப்பட்டது. இந்த படையினரிடத்தில் பவுல் ஒப்புவிக்கப்பட்டு இவர்களால் காவல் செய்யப்பட்டது, இவரது வழக்கிற்கு ரோம அலுவலர்களால் தரப்பட்ட முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கலாம்.*

*பவுலைக் காவல் செய்வதில், ஒவ்வொரு ஆறு மணி வேளைக்கும் பணிகள் மாறுவதாக இருத்தல் என்பது நிர்ணயமான நடைமுறையாக இருந்தது. இவ்வாறாக இந்த அப்போஸ்தலர் ஒரு நாளுக்கு நான்கு போர்வீரர்கள் மீது விளைவு ஏற்படுத்தும் வாய்ப்பைக் கொண்டிருந்தார். எனது கணக்குச் சரியானதாக உள்ளதென்றால், இது இரண்டு ஆண்டுகளில் ஏறக்குறைய 2,920 தொடர்புகளாக இருந்திருக்கக் கூடும்![7] பவுல் ஒரு கைதி என்று*

*போர்வீரர்கள் நினைத்தனர் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் அவர் தமது பணிமும்முரமான [பின்வரும்] நாட்களினூடே செல்லுகையில் "சிலையாக நின்று உரையைக் கேட்பவர்களை" கொண்டிருந்தார்:*

- *அவர், பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் போன்ற கடிதங்களை எழுதும்படி கூறுகையில்.*
- *அவர், தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிராதீத்து போன்ற நண்பர்களுடன் பேசுகையில் (காண்க 1:1; 2:25).*
- *அவர், தம்மைக் காணவந்தவர்களுக்குப் போதிக்கையில் (காண்க நடபடிகள் 28:17-31).*
- *அவர், தேவனிடத்தில் ஜெபித்து அவரைத் துதிக்கையில். (காண்க பிலிப்பியர் 1:3, 4. இதற்கு முன்பு சிறைப்பட்டிருந்தது பற்றிக் கூறும் நடபடிகள் 16:25ம் வசனமானது, பவுல் சிறைவைக்கப்பட்டிருக்கையில் ஈடுபட்டிருந்த செயலின் வகையைக் காண்பிக்கிறது.)*
- *அவர், தம்மைச் சிறைப்பிடித்து வைத்திருந்தவர்களிடத்தில் பேசி அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில். (அவர் போர்வீரர்களுடன் பேசினார் என்று வேத வசனம் கூறுவதில்லை, ஆனால் இந்தத் தனிச்சிறப்பான வாய்ப்பை அவர் தவறவிட்டிருப்பார் என்று நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? காண்க ரோமார் 1:14-16.)*

பவுல் தொடக்கத்தில் திட்டமிட்டபடி ரோமாபுரிக்குச் சென்று, ரோம அரங்க சாலையில் பிரசங்கித்து இருப்பார் என்றால், அநேகமாக அவர் கூறுவதைக் கவனிக்கப் போர்வீரர்களில் எவரும் அங்கு வந்து நின்றிருக்க மாட்டார்கள். இருப்பினும், அவர்கள் இரவும் பகலுமாக அவருடன் சங்கிலியால் கட்டப்பட்டு இருந்தபடியால், அவரைப் புறக்கணித்தல் என்பது கடினமானதாக இருந்திருக்கும். தேவன் அறிவுகடந்த வகையில் செயல்படுகிறார்!

இந்தப் போர்வீரர்களில் எவரேனும் கிறிஸ்தவரானார்களா? ஏவுதல் பெற்றிராத பாரம்பரியக்கூற்றின்படி சிலர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். குறைந்தபட்சம் அவர்கள் பவுல் பிரதிநிதித்துவப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்ளவாவது செய்தனர். அப்போஸ்தலர் தமது, "அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று *வெளியரங்கமாகி*" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). அவர் குற்றம் எதையோ செய்து சிறைவைக்கப்படவில்லை, ஆனால் இயேசுவின் மீது கொண்டிருந்த தமது விசுவாசத்தின் காரணமாகவே சிறைவைக்கப்பட்டிருந்தார் என்று அவர்கள் அறிந்தனர். NIV வேதாகமத்தில், "நான் கிறிஸ்துவுக்காகக் கட்டுகளில் இருக்கிறேன் என்பது அரண்மனைக் காவலர்கள் யாவருக்கும் மற்றும் ஒவ்வொருவருக்கும் தெளிவானது" என்றுள்ளது.

மேலும் பவுல், "மற்ற யாவருக்கும்" என் கட்டுகள் "கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று" வெளியரங்கமாகி, என்றும் கூறினார் (வசனம் 13ஆ). "மற்ற யாவருக்கும்" என்பது அப்போஸ்தலர் விளைவு ஏற்படுத்திய மற்றவர்களை உள்ளடக்குவதாக இருக்கும். (இவர்களில் ஒருவர், தமது முதலாளியை விட்டு ஓடிவந்த ஒநேசிமு என்ற அடிமையாக இருந்தார்; காண்க பிலேமோன் 10-21.)

ரோமாபுரியில் செய்தி விரைவாகப் பரவிற்று. பவுல் அனேகமாக இராயனின் வீட்டார் மனமாற்றத்தில் ஒரு பங்கைக் கொண்டிருந்திருப்பார் (காண்க 4:22). தேவனுடைய செய்தியாளர் கட்டப்பட்டு இருக்கலாம், ஆனால் தேவனுடைய செய்தி அவ்வாறு இருக்கவில்லை (காண்க 2 தீமோத்தேயு 2:9)!

இவ்வாறாக, வசனம் பரவுவதற்கான தனிச்சிறந்த வாய்ப்புகள் என்பவை, அவருடைய கட்டுக்களின் விளைவாக, சுவிசேஷம் எவ்வாறு பிரபலமாயிற்று என்பதற்கான முதல் உதாரணமாக இருந்தது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, நீங்களும் நானும், பல வழிகளில் "கட்டப்பட்டு" இருப்பதாக உணரலாம் - ஆனால் இந்தக் "கட்டுகளில்" பெரும்பான்மையானவை மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளை அளிக்கின்றன. பவுல் போர்வீரர்களுடன் கட்டப்பட்டிருக்கையில், அவர்கள் அவருடன் கட்டப்பட்டு இருந்தனர். அதுபோன்றே, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, ஆனால் மற்றவர்களும், விரும்பத்தக்கதற்கு குறைவான சூழ்நிலைகளில் கட்டப்பட்டிருக்கின்றனர் - இது அவர்களின் மீது விளைவு ஏற்படுத்த வாய்ப்புகளை அளிக்கிறது. ஒரு தாயானவள் வீடு நிறைய உள்ள சிறுகுழந்தைகளுடன் "கட்டப்பட்டு" இருப்பதாக உணரலாம்; ஆனால் அந்தக் குழந்தைகளுக்கு அவள் கர்த்தருடைய வழியைப் போதித்தால் (உபாகமம் 6:7), இராஜ்யத்தில் அந்தப் பிள்ளைகள் செய்யவிருக்கும் நற்செயல்கள் என்ன என்று யார் அறிவார்?[8] ஒரு பெண், விசுவாசியாயிராத தனது துணையுடன் "கட்டப்பட்டிருப்பதாக" உணரலாம், ஆனால் அவருக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கும் வாய்ப்பை அவள் கொண்டிருக்கிறாள் (காண்க 1 பேதுரு 3:1, 2). ஒரு வேலைக்காரர் தாம் விரும்பாத ஒரு வேலையுடன் "கட்டப்பட்டிருப்பதாக" உணரலாம், ஆனால் பெரும்பான்மையான வேலைகள், உடன் வேலை செய்பவர்களுக்குப் போதிப்பதை உள்ளடக்கி இருக்கின்றன. பல மக்கள் உடல் ரீதியான கோளாறுகளினால் "கட்டப்பட்டிருக்கின்றனர்," ஆனால் அப்படிப்பட்ட வாய்ப்புகள் கிறிஸ்துவின் ஊழியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உடல் இயலாமையுடன் இருக்கும் சிலர், தேவனுக்கு ஊழியம் செய்யவும் மற்றவர்களுக்கு உதவவும் வேறு வகையில் தாங்கள் பெற்றிருக்கக் கூடாத நேரத்தை அந்த நிலையில் கொண்டிருப்பதைக் கண்டறிந்து இருக்கின்றனர். எனக்குத் தெரிந்த, வீட்டோடு இருக்கும் ஒரு பெண்மணி, அட்டைகள், கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் ஆகியவற்றைக் கொண்டு மற்றவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

## இரட்சிக்கப்பட்டவர்களுக்குத் தைரியம்

பவுலின் கட்டுகள் சுவிசேஷம் பிரபலமாவதற்கு எவ்வாறு உதவின என்பதற்குப் பவுல் இரண்டாவது உதாரணம் ஒன்றைக் கொடுத்தார்: அவைகள் இரட்சிக்கப்பட்டவர்களுக்குத் தைரியம் அளித்தன. அவர், "சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்" என்று எழுதினார் (வசனம் 14). இது ஒருசில வசனங்களுக்குப் பிற்பாடு பவுல் குறிப்பிட்டதைப் போன்று முற்றிலும் உண்மையாக இருக்கவில்லை - ஆனால் இது பெரும்பான்மையும் உண்மையாக இருந்தது.

பவுல் சிறைவைக்கப்பட்டது மற்றவர்களுக்குத் தைரியத்தை எவ்வாறு கொடுத்தது? பவுல் தம்மைப் பாரமரித்துக் கொள்வதற்குக் கர்த்தர்மீது எவ்வளவு

நம்பிக்கைவைத்திருந்தார் என்று அவர்கள் கண்ட போது, ஒருவேளை இது தேவன்மீது அவர்கள் கொண்டிருந்த தைரியமான நம்பிக்கையைப் பெருகச் செய்திருக்கலாம். அப்போஸ்தலர் தமக்குத் துன்பங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவர் கொண்டிருந்த உறுதிப்பாடு, அவர்கள் தங்களுக்கு என்ன விதமான இகழ்ச்சி வந்தபோதும் அவற்றை எதிர்கொள்ள அவர்களுக்குத் தைரியத்தைக் கொடுத்திருக்கலாம். விலங்கிடப்பட்டுள்ள ஒரு மனிதர் மூலமாகத் தேவன் பெரிய செயல்களைச் செய்ய முடியும் என்றால், தங்கள் மூலமாகவும் அவர் பெரிய செயல்களைச் செய்யமுடியும் என்று அவர்கள் பகுத்தறிந்து இருக்கலாம். சுவிசேஷத்திற்காகப் பேசும் முக்கிய பேச்சாளர்களில் ஒருவர் தமது நடமாட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் சுவிசேஷம் பாதிக்கப்படாதபடிக்கு அவர்கள் தங்கள் முயற்சிகளைப் பெருக்கமடையச் செய்வதற்குப் பவுலின் துன்பங்கள் காரணமாக இருந்திருக்கலாம்.

14ம் வசனம், "பிரசங்கித்தல்" என்பதற்குப் பதிலாக "சொல்லுதல்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. "பிரசங்கித்தல்" என்பதற்கான வழக்கமான கிரேக்க வார்த்தையானது (*karusso*, "அறிவிக்க") வெளியரங்கமான அறிவித்தலை மறைமுகமாக உணர்த்துகையில், இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது (*laleo* என்பதன் ஒரு வடிவம்) "பேச" என்ற அர்த்தம் கொண்ட சாதாரண கிரேக்கச் சொற்றொடர்களின் ஒன்றாக உள்ளது. இவ்விடத்தில் வெளியரங்கமான அறிவித்தல் மீதல்ல ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவராலும் சுவிசேஷம் தினந்தோறும் பகிர்ந்து கொள்ளப்படுதல் மீது வலியுறுத்தம் உள்ளது என்று விளக்கவுரையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் (காண்க நடபடிகள் 8:1, 4).

கிறிஸ்தவத்தைத் தொடக்க காலத்தில் விமர்சித்தவர்களில் ஒருவரான செல்ஸஸ் என்பவர், "தோல் பதனிடும் வேலை செய்பவர்கள், கம்பளிவேலை செய்பவர்கள், செருப்பு தைப்பவர்கள், மிகவும் கல்வி அறிவற்றவர்கள் மற்றும் மனித குலத்தில் கேவலமானவர்களே சுவிசேஷத்தை வைராக்கியத்துடன் பிரசங்கிப்பவர்களாக உள்ளனர்" என்று எழுதினார்.[9] செல்ஸஸ் இதை ஒரு விமர்சனமாகக் குறிப்பிட்டார், ஆனால் இது ஒரு உயர்வான புகழ்ச்சியாக இருக்கிறது. "வர்த்தகரின் காசு வாங்குமிடம், வரிவசூலிப்பவரின் எழுது மேஜை, விவசாயியின் உழவுக் கைப்பிடிகள் அவர்களின் பிரசங்க மேடைகளாக இருந்தன."[10] பவுல் சிறையில் வைக்கப்பட்டிருந்தது கிறிஸ்தவர்களுக்கு இதுபோன்ற மாபெரும் நம்பிக்கையைக் கொடுத்தது.

## அவர் தேவனுடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதலைக் கண்டார் (1:15-18)

பவுல் சிறைப்படுத்தப்பட்டிருத்தலின் சிறுமையைச் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது மட்டும் இன்றி, அவர் தம்மை இகழ்ச்சி செய்து தமக்குத் துன்பம் விளைவிக்க முயற்சி செய்த சகோதரர்களினால் ஏற்பட்ட வேதனையையும் சகித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. இதை அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தல் மூலமாகச் செய்தனர் என்பதுதான் வினோதமானதாக இருந்தது!

சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும்

> *கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள் (வசனங்கள் 15-17).*[11]

''சில'' மனிதர்கள் பவுல் மீதான ''நல்லெண்ணம்'' மற்றும் அவர் மீதான ''அன்பினாலே கிறிஸ்துவைப் பிரசங்கித்தனர்.'' உண்மையில் ''பெரும்பான்மையானவர்கள்'' இதைச் செய்தனர் (1:14). அவர்கள் பவுலையும், அவர் எதற்காக நின்றாரோ அந்தக் காரணத்தையும் மற்றும் அவர் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்ததையும் பாராட்டினர். அவர் "சுவிசேஷத்திற்கு உத்தரவு சொல்ல நியமிக்கப்பட்டவராக" இருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். சந்தர்ப்பப் பொருளில் ''நியமிக்கப்பட்டவர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "தெய்வீகத்தினால் நியமிக்கப்பட்டவர்'' என்ற கருத்தை மறைமுகமாக உணர்த்துகிறது. பவுல், *இயேசுவைப் பற்றிய* நற்செய்திக்கு உத்தரவு சொல்ல "நியமிக்கப்பட்டிருந்தார்." அவர் விரைவிலேயே இராயனின் நீதிமன்றத்திற்குச் சொல்ல வேண்டியிருந்தது என்றாலும், அவர் தம்மைத் தற்காத்துக்கொள்ளுதல் பற்றி அக்கறைப்படவில்லை; சுவிசேஷத்தைத் தற்காத்துக்கொள்வதே அவருடைய அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது!

## எதைப்பற்றி நாம் நிச்சயமாக இருக்க முடியாது

இருப்பினும் சில சகோதரர்கள், தவறான நோக்கங்களுக்காகக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து, பவுலின் துன்பத்தைப் பெருகச்செய்ய நம்பிக்கையாயிருந்தனர். அவர்கள் யாராக இருந்தனர்? இந்த மனிதர்கள் கடந்த காலத்தில் அப்போஸ்தலரைத் துன்புறுத்திய யூதர்களாகவோஅல்லது அவிசுவாசிகளாகவோ இருந்திருக்கமாட்டார்கள். அவ்வப்போது பவுல், தமது சக யூதர்களை, மாம்சத்தில் தமது சகோதரர்களைக் குறிப்பதற்கு ''சகோதரர்'' என்ற வார்த்தையைக் பயன்படுத்தினார் (காண்க 1:14); ஆனால் அப்படிப்பட்ட மனிதர்கள் "கிறிஸ்துவைப் பிரசங்கித்து" இருக்கமாட்டார்கள் (வசனம் 15). மேலும், இவர்கள் - கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று போதித்த யூதக்கிறிஸ்தவர்களான - யூதத்துவப் போதகர்களாக இருந்திருக்கவும் முடியாது. *அவர்களின்* செய்தியில் பவுல் ஒருக்காலும் அகம்மகிழ்ந்து இருக்கமாட்டார் (காண்க காலத்தியர் 1:8, 9; 5:2-4), ஆனால் அவர் பிலிப்பியர் 1:18ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் செய் தியில் அகம் மகிழ்ந்தார். இவ்வசனப் பகுதியைக் கவனத்துடன் வாசியுங்கள். *செய்தியில்* அல்ல ஆனால் செய்தியாளர்களின் *நோக்கத்திலேயே* பிரச்சனை இருந்தது.

பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது யார் என்பதைப் பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது, ஆனால் அவர்கள் அனேகமாக, ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவ சுவிசேஷ ஊழியக்காரராக இருந்திருக்க வேண்டும். பவுல் சென்று சேருகையில் சபை ஏற்கனவே நிலைநாட்டப்பட்ட ஒருசில இடங்களில் ஒன்றாக ரோமாபுரி இருந்தது. சட்டப்படி அவர், ''மற்றொருவனுடைய

அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு” இருத்தலை அவர் தேர்ந்துகொண்டார் (ரோமர் 1:11-15). ஒருவேளை, ரோமாபுரியில் இருந்து சுவிசேஷம் ரோமப்பேரரசின் எல்லா மூலைகளுக்கும் பரவ முடியும் என்று அவர் அறிந்தார் என்பதே இதற்கு ஒரு காரணமாக இருந்தது எனலாம்.

இதற்கு ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு,[12] பவுல் ரோமாபுரியில் இருந்த சபைக்கு ஒரு நிருபத்தை எழுதியிருந்தார், அதில் இரண்டு டஜனுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் பெயருடன் குறிப்பிடப்பட்டிருந்தனர் (ரோமர் 16:3-16). அந்த நகரில் இருந்த சபையானது அப்போஸ்தலர் அங்கு சென்ற காலத்தில், திறன்மிக்க சுவிசேஷ ஊழியர்கள் பலரைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டு இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

துரதிர்ஷ்டவசமாக, இவர்களில் சிலர் பவுலை விரும்பாதிருந்தனர். அது ஏன் என்று நமக்குத் தெரியவில்லை. பவுலிடத்தில் அவர்கள் கொண்டிருந்த விரோத உணர்வு ரோமாபுரியின் சபையில் இருந்த எல்லாராலும் பகிர்ந்து கொள்ளப்படவில்லை (காண்க நடபடிகள் 28:14ஆ-16அ). ஒருவேளை குறிப்பிட்ட இந்தச் சுவிசேஷ ஊழியர்கள் சபையை குறித்த நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப முயற்சி செய்திருக்கலாம், அவர்கள் பவுல் ஒரு கைதியாக அந்த நகருக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது பற்றிச் சங்கடம் அடைந்திருக்கலாம். அப்போஸ்தலருக்குத் தரப்பட்ட கவனம் குறித்து அவர்கள் பொறாமை கொண்டிருக்கக்கூடச் சாத்தியமுள்ளது. அவர்கள் தங்கள் சொந்த நடத்துவத்துவப் பணிப்பொறுப்புகள் அச்சுறுத்தப்பட்டதாக உணர்ந்திருக்கலாம்.

இந்த மனிதர்கள் “[பவுலின்] கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து” சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடிவு செய்தனர் என்பதுதான் சூழ்நிலையின் மிக வினோதமான பாகமாக இருக்கிறது. ஒருவேளை அவர்கள், தாங்கள் கொண்டிருந்த அதே சுயநல மையங்கொண்ட நோக்கங்களைப் பவுலும் கொண்டிருப்பார் என்று யூகித்திருக்கலாம். ஆகவே அவர்கள், தங்கள் பிரசங்கித்தலில் பவுலைக் காட்டிலும் அதிகம் “வெற்றி நிறைந்தவர்களாக” இருந்தால், அது அவரை வருத்தம் அடையச் செய்யும் என்று யூகித்திருக்கலாம். சுவிசேஷத்தைக் தீவிரமாகப் பிரசங்கித்தலானது ரோம அதிகாரிகளைத் தொந்தரவு செய்து பவுலைக் கடினமாக உபத்திரவப்படுத்தும்படியான செயல் விளைவை அவர்களிடம் ஏற்படுத்தும் என்று அவர்கள் நினைத்திருப்பார்கள் என்ற இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. அவர்கள் இவ்வாறு சிந்தித்து இருப்பார்கள் என்றால், அவர்களும் கூட எதிர்விதமாகப் பாதிப்பை அடையக்கூடும் என்றும் அவர்கள் உணர்ந்து அறிந்திருக்க வேண்டும். இருப்பினும் பொறாமையானது ஒருக்காலும் தர்க்கரீதியானதாக இருந்ததில்லை.

## எதைப்பற்றி நாம் நிச்சயமாக இருக்க முடியும்

தவறான காரணங்களுக்காகக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து யார் அல்லது ஏன் என்பது பற்றி நம்மால் நிச்சயமாக ஒன்றும் கூற இயலாது, ஆனால் கர்த்தரைச் சேவிப்பதில் தூய்மையற்ற நோக்கங்கள் கொண்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது என்று நமது வேதவசனப் பகுதியில் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். பவுலைப் புண்படுத்த முயற்சி செய்தவர்களின் நோக்கங்களைக் கண்ணோக்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். 15ம் வசனம், சிலர் “பொறாமையினாலும் விரோதத்தினாலும், ... கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்”

என்று கூறுகிறது. இந்தப் பிரசங்கியார்கள் தங்களைப் பவுலுக்குப் போட்டியாளர்களாகக் கண்டனர் என்பது தெளிவு. பொறாமையும் விரோதமும் ஒன்றாகவே செல்லுகின்றன மற்றும் இவை எப்போதுமே சபையின்மீது ஒரு சாபமாகவே இருந்துள்ளன.

16ம் வசனம், அவர்கள் கிறிஸ்துவை "விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்" என்று கூறுகிறது. கிரேக்க வசனப்பகுதியில் உள்ள வார்த்தையானது "கூலிக்கு சேவிக்க" என்ற தோற்றகால அர்த்தம் கொண்டுள்ளது.[13] பின்பு அது, கூலிக்காக மாத்திரம், சுயபயனுக்காக மாத்திரம் ஊழியம் செய்யும் ஒருவரைக் குறிப்பிட வந்தது. கடைசியாக அது, அரசியலில் இணைவு கொண்டிருக்க வந்தது: எந்த விலை கொடுத்தாகிலும் ஆதரவைப் பெற வேலைசெய்தல், மக்களை ஒருவரின் "பக்கத்தில்" அணி திரளச் செய்தல்.

முதல் நூற்றாண்டில் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் இருந்தனர் என்று நம்புவதை நீங்கள் சிரமமானதாகக் காண்கிறீர்களா? அவர்களைப் போன்ற சிலர் இன்றைய நாட்களிலும் நம்மைச் சுற்றி இருக்கிறார்களோ என்று நான் அஞ்சுகிறேன். நம்மால் மற்றவர்களின் குறைபாடுகளைச் சுலபமாகச் சுட்டிக்காண்பிக்க முடிகிறது, ஆனால் நம்மையே நாம் கண்ணோக்குவோமாக. கிறிஸ்தவ ஊழியத்திற்கான நமது நோக்கங்கள் எப்போதாவது ''தூய்மை'' என்பதைக் காட்டிலும் குறைவானதாக இருக்கின்றனவா? பிரசங்கிக்க விரும்புகிறவர்களுக்கு முதலில் ஒரு வார்த்தையை நான் கூறுவேன்: பிரசங்கித்தல் என்பது "ஒரு நல்ல [வசதியான] வாழ்வை" அல்லது "ஒரு சுலபமான [சுகமான] வாழ்வை" ஏற்படுத்துவதற்கான வழியாக *இருப்பதில்லை*. பிரசங்கித்தல் என்பது மரியாதை மற்றும் கவனத்தை ஆதாயப்படுத்துவதற்கான வழிமுறையாகக் கையாளப்படக் *கூடாது*; அது ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு தேவனை மகிமைப்படுத்துவதற்குமான வழியாக *உள்ளது*. பிரசங்கியாது இருப்பவர்களிடத்திலும் நான் பேசுவேன். நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினித்தம் நாம் செய்கின்றவற்றை ஏன் நாம் செய்கிறோம் என்று பரிசீலனை செய்து பார்த்தல் அவசியமாக உள்ளது. நாம் புகழ்ச்சி அல்லது கவனத்தை விரும்புவதால் ஒருசில பணிகளில் செயல்படுகிறோமா? நாம் "பாராட்டப்படவில்லை'' என்று உணர்ந்தால் உடனே அதிலிருந்து வெளியேறி விடுகிறோமா? தேவனுக்கு "தூய்மையான நோக்கங்களுடன்" ஊழியம் செய்ய அவர் நமக்கு உதவுவாராக.

பவுல் கசப்புணர்வு உடையவராகி இருக்கலாம். அவர், "நான் ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் இருந்திருக்கிறேன், மற்றும் சகிக்க இயலாத இந்தச் சூழ்நிலையில் மிகச்சிறந்தவற்றைச் செய்ய நான் முயற்சித்திருக்கிறேன். நான் போதித்துக் கொண்டும் நிருபங்களை எழுதிக் கொண்டும் நல்ல நடக்கையைப் பராமரிக்க முயற்சிசெய்து கொண்டும் இருக்கிறேன். இப்போது இங்கே *எனது சொந்த சகோதரர்களே* என்னைப் புண்படுத்த முயற்சி செய்கின்றனர்! அது நியாயமானதல்ல!" என்று கூறியிருக்க முடியும். அதற்குப் பதிலாக அவர், "இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்'' என்று கூறினார் (வசனம் 18). இது "மாபெரும் மனிதர்களில் ஒருவரால் கூறப்பட்ட மிகக் கண்ணியமான கூற்றுகளில் ஒன்றாகும்" என்று அழைக்கப்பட்டுள்ளது.[14] பவுல்,

பவுலைக் குறித்துக் கவலை கொண்டிருக்கவில்லை. அவர் சுவிசேஷத்தைக் குறித்து அக்கறை கொண்டிருந்தார். அவர் தம்மைச் குறித்து விமர்சகர்கள் என்ன நினைத்தனர் என்பது பற்றி நிலைகுலைந்து போகவில்லை, ஆனால் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைப் பற்றி சந்தோஷம் அடைந்தார்.

முன்னெச்சரிக்கையான இரு குறிப்புகள் இவ்விடத்தில் முறையானவையாக உள்ளன: முதலாவது, ஒருவரின் நோக்கங்கள் முக்கியமானவைஅல்ல என்று பிலிப்பியர் 1:18 போதிப்பதில்லை. ஒரு விஷயத்தை நாம் *ஏன்* செய்கிறோம் என்பது தேவனுடைய பார்வையில் முக்கியமானதாக உள்ளது என்று ஏற்கெனவே நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம் (காண்க 1 கொரிந்தியர் 13:1-3; ரோமர் 16:17, 18; 2 கொரிந்தியர் 9:7). இரண்டாவது, மற்றவர்களின் மோசமான நோக்கங்களுக்காக அவர்களைக் குற்றப்படுத்துவதற்கு ஒரு முன் எடுத்துக்காட்டை பிலிப்பியர் 1:18 அமைத்து வைப்பதில்லை. பவுலைப் போலின்றி, நீங்களும் நானும் ஏவுதல் பெற்றிருப்பதில்லை மற்றும் நாம் பிறரின் நோக்கங்கள் பற்றி அதிகாரத்துவத்துடன் பேச முடியாது. நாம் *நமது சொந்த* நோக்கங்களை நன்கு பரிசீலனை செய்து மற்றவர்களின் நோக்கங்களைக் கர்த்தர் நியாயந்தீர்க்க விட்டுவிட வேண்டும் (காண்க எபிரெயர் 4:13; ரோமர் 2:16).

பிலிப்பியர் 1:18ல் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள *முடியும்*? தவறாக நடத்தப்படுதல் பற்றிய அழிவுக்குரிய சிந்தனைகளினால் நமது மனங்களை குழப்பம் அடையச் செய்துவிடக்கூடாது என்று நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட தவறாக நடத்தப்படுதலில் இருப்பவர்கள் பரிதாபகரமான நிலையில் உள்ளனர். மேலும் நன்மை செய்கின்ற மக்களை, அவர்கள் மிகத்தூய்மையான நோக்கங்களுக்காக அவற்றைச் செய்யவில்லையோ என்று நாம் சந்தேகப்பட்டாலும்கூட, நாம் அவர்களைப் பாராட்டக் கற்றுக்கொள்ள முடியும். மற்றவர்களில் உள்ள எதிர்மறையானவற்றை அல்ல, ஆனால் நேர்மறையானவற்றை நாம் கண்ணோக்குதல் அவசியமாக உள்ளது.

## அவர் தேவனுடைய தயவின் அளிப்பைக் கண்டார் (1:19, 20)

பவுல் தமது சூழ்நிலையைக் கண்ணோக்கியபோது வேறு எவற்றைக் கண்டார்? நிகழ்வுகள் "ஒரு சந்தோஷமான முடிவில்" உச்சகட்டம் அடைவதை அவர் கண்டார்:

> அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன். நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்போழுதும்போல இப்பொழுதும், மிகுந்ததைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும் (வசனங்கள் 19, 20).

இவ்வசனங்களில் அப்போஸ்தலர் தாம் ஏன் சந்தோஷம் அடைந்தார் என்பது பற்றித் தொடர்ந்து கூறினார் ("அது" என்ற வார்த்தை 19 மற்றும்

20ம் வசனங்களை 18ம் வசனத்துடன் பிணைக்கிறது). இவ்விரு வசனங்களும் வலிவுடன் அதிர்ந்து துடிக்கின்றன. 19ம் வசனத்தில் பவுல், "அறிவேன்" என்று கூறினார், இது "அறிதல்" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இருக்கவில்லை, ஆனால் "உறுதியான நம்பிக்கையுடன் கூடிய அறிவு" என்பதைக் கருத்தாக தெரிவிக்கும் வார்த்தையாக உள்ளது.[15] 20ம் வசனம், பவுலின் "வாஞ்சையை [ஊக்கமான எதிர்பார்ப்பை]" குறிக்கிறது. "வாஞ்சை" என்பது *apo* ("இருந்து புறம்பே") என்ற முன்னிடைச் சொல்லை *kara* ("தலை") என்ற பெயர்ச்சொல்லுடனும் *dokein* ("கண்ணோக்க") என்ற வினைச்சொல்லுடனும் இணைக்கும் *apokaradokia* என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது. இந்த வார்த்தை "விருப்பம் கொண்டுள்ள குறிக்கோள் மீது கவனத்தை நிலைநிறுத்துவதற்காக மற்ற எல்லாவற்றில் இருந்தும் திரும்புகிற, ஆவலான, வலிவான கண்ணோக்கு" ஒன்றைக் குறிக்கிறது.[16]

## பவுலின் இரட்சிப்பு [விடுதலை]

நடந்துகொண்டிருந்த ஒவ்வொரு விஷயத்தின் மீதும் பவுல் தமது பார்வையை நிலைநிறுத்துகையில், அவர் இரண்டு நல்ல விளைவுகளைக் கண்டார். முதலாவது அவரது சொந்த விடுதலை: "அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." ஆங்கில வேதாகமத்தில் "விடுதலை" ["deliverance"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை (இது *soterias* என்பதன் ஒரு வடிவமாகும்) "இரட்சிப்பு" என்று மிகப் பொதுவாக மொழிபெயர்க்கப்படுகிறது (KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில் காண்க). "இரட்சிப்பு" என்பது தன்னில்தானே ஒரு "வெறுமையான" வார்த்தையாக உள்ளது என்பதைச் சிலவேளைகளில் நாம் மறந்துபோகும் அளவுக்கு அது, நமது விசுவாசத்தின் அவ்வளவு வலிவார்ந்த பாகமாகவும் அவ்வளவு விலையேறப்பெற்ற வார்த்தையாகவும் உள்ளது. அவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளானது, பேரழிவில் இருந்து ஒருவர் இரட்சிக்கப்பட்ட நிலையைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்க வேண்டும். பவுல் தமது சிந்தையில் எவ்வகையான "விடுதலை"/"இரட்சிப்பு" என்பதைக் கொண்டிருந்தார்? ஒரு சில சாத்தியக்கூறுகள் யாவை?

- சிறைவைப்பில் இருந்து விடுவிக்கப்படுதல்? ஒருவேளை இருக்கலாம், ஆனால் பவுல் தமது விடுதலை பற்றி நம்பிக்கையாயிருக்கவில்லை (காண்க 2:17, 23, 24). "அறிவேன்" என்ற சொற்றொடர் அவர் விடுதலை ஆவதற்கு மாத்திரம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், அது சற்றே பலத்ததாகக் காணப்படுகிறது.
- தமது விரோதிகளின் இகழ்ச்சி மற்றும் தவறாக நடத்தப்படுதல் ஆகியவற்றில் இருந்து விடுவிக்கப்படுதல்? இருக்கலாம். செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் யோபு 13:16ல் உள்ள அதே சொற்றொடராக்கத்தைக் பவுல் பயன்படுத்தினார். பவுல், யோபுவின் புத்தகத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார் என்றும் யோபு அர்த்தப்படுத்தியதையே பவுலும் அர்த்தப்படுத்தினார் என்றும் பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர்: "என் நீதி விளங்கும்" (காண்க யோபு 13:18).
- நீரோவுக்கு முன்பாக அவர் வந்தபோது ஏற்பட்ட இக்கட்டான

சூழ்நிலையில் இருந்து விடுவிக்கப்படுதல்? ஒருவேளை அவ்வாறு இருக்கலாம்; இது அடுத்த வசனத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும். ரோம நீதிமன்றத்தில் முன்பாகப் பவுல் தமது வாதத்தை ஏற்படுத்தியபோது, இயேசுவின் மீது தாம் கொண்டிருந்த விசுவாசத்தைத் தைரியமாக அறிவிக்கும்படி அவர் ஜெபித்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

- நித்தியத்திற்கும் விடுவிக்க (இரட்சிக்க)ப்படுதல்? இதைப் பவுல் தமது முழுஇருதயத்தோடும் நம்பினார் (பிலிப்பியர் 1:23; காண்க ரோமர் 5:9).

பவுலின் ''விடுவிக்கப்படுதல்'' என்பது மேலே கடைசியாகக் குறிப்பிடப்பட்டதாகவே இருக்கும் என்பது எனது தனிப்பட்ட தேர்வாக உள்ளது. சட்டப்படி பவுல், "இரட்சிப்பு" என்ற வார்த்தையைப் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுதலைக் குறிப்பிடவே பயன்படுத்தினார். ஒருவேளை, இங்குள்ள "விடுவிக்கப்படுதல்" [தமிழில் "இரட்சிப்பு"] என்ற வார்த்தை மேற்கண்ட கருத்துக்களின் கலவையை உள்ளடக்கி இருக்கலாம். *என்ன நடந்தாலும்*, பவுல் நிறைவாக "விடுதலையில்" இருப்பார்.

அவரது விடுதலைக்கு இரு விஷயங்கள் பங்களிப்பதாயிருக்கிறது, முதலாவது, பிலிப்பியர்களின் ஜெபங்களின் மூலம் கிடைத்த ஆதரவாக இருந்தது: "அது உங்கள் வேண்டுதலினாலும் ... எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." அவர்களுக்காகப் பவுல் ஜெபித்தார் (1:3, 4), மற்றும் அவர்கள் பவுலுக்காக ஜெபித்தனர் (1:19). பவுல் எப்போதுமே சக கிறிஸ்தவர்களின் ஜெபங்களை அளவு கடந்த ஆவலுடன் நாடினார் (ரோமர் 15:30-32; 2 கொரிந்தியர் 1:11; 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 3:1, 2; பிலேமோன் 22). கிறிஸ்தவர்கள் ஒருவருக்காக மற்றவர் ஜெபிப்பது அவசியமாக உள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் ஆதரவு என்பது அவரது விடுதலைக்குப் பங்களித்த இரண்டாவது விஷயமாக உள்ளது: "அது ... இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." "உதவி" என்று தரவழைக்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் வேரில் இருந்துதான் நாம் "chorus" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். இந்தச் சொற்றொடர் தொடக்கத்தில், ஒரு கிரேக்க நகரமானது ஒரு பண்டிகைக்குத் திட்டமிடும்போது ஆடல் - பாடல் குழுவின் செலவுகளுக்குப் பணம் கொடுத்தலைக் குறிப்பிட்டது. அந்த நிகழ்ச்சியை நடத்துபவர்களுக்குச் செலவிடுவதற்காக ஏராளமான தொகையைக் கொடுக்கும்படி செல்வந்தரான குடிமகன் ஒருவரிடம் அராசாங்கம் வேண்டிக் கேட்டுக்கொள்ளும். கடைசியில் இந்த வார்த்தைக்கு ஆடல் பாடல் குழுவினருடன் இருந்த இணைவு விடப்பட்டது, ஆனால் இவ்வார்த்தை தாராளமாக மற்றும் ஊதாரித்தனமாக அளித்தலின் கருத்தைத் தக்கவைத்துக் கொண்டது.[17] பரிசுத்த ஆவியானவரே "இயேசுகிறிஸ்துவினுடைய ஆவி" எனப்படுகிறார். பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக இயேசு வாக்குறுதி அளித்து அவர் தமது வாக்குறுதியை நிறைவேற்றியிருந்தார் (யோவான் 14:16, 17; நடபடிகள் 1:8; 2:1-4). வில்லியம் பார்க்ளே என்பவர் இதை, "கிறிஸ்து எனக்கு அளிக்கிற பரிசுத்த ஆவியானவரின் தாராளமான உதவி" என்று ஏற்புடைய சொற்றொடராக மொழிபெயர்த்தார்.[18]

பவுல் பரிசுத்த ஆவியானவர் தமக்குத் தாராளமாகவும் வரம்புகடந்த

*வகையிலும் உதவுவார் என்று முன்னெதிர் நோக்கினார் - மற்றும் ஆவியானவர் நமக்கும் அளிக்கிறார். நாம் தண்ணீருக்குள் முழுக்காட்டப்பட்டு கிறிஸ்தவர்கள் ஆனபோது, பரிசுத்த ஆவியானவரையே ஒரு கொடையாகப் பெற்றுக்கொள்கிறோம் (நடபடிகள் 2:38). தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்குள்ளும் வாசம்செய்கிற பரிசுத்த ஆவியானவர், பெலம் மற்றும் உதவியின் ஆதாரமூலமாக இருக்கிறார் (ரோமர் 8:11-13, 26-28). "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" என்று எழுதியபோது பவுல், ஆவியானவரிடத்தில் இருந்து வரும் உதவியையும் உள்ளடக்கி இருக்கலாம் (பிலிப்பியர் 4:19).*

## கிறிஸ்து மகிமைப்படுதல்

*இயேசு மகிமைப்படுதல் என்பது பவுல் முன்னதாகக் கண்ட இரண்டாவது நல்ல விளைவாக உள்ளது: "நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" (1:20). இந்தக் கூற்றானது அனேகமாக, இராயனுக்கு முன்பாகப் பவுல் நிற்க வேண்டியதை முன்னெதிர் நோக்குவதாக இருக்கலாம். அப்போஸ்தலர், ராஜ அறைகளுக்குள் தாம் தைரியமாக இருப்போம் என்று வெகு நம்பிக்கையாக இருந்தார் - மற்றும் இவ்வாறாக அவர் தமது வாழ்வை எந்தக் காரணத்திற்காக ஒப்புக்கொடுத்திருந்தாரோ அதனிமித்தம் தாம் "வெட்கப்பட்டுப் போகாமல்" மற்றும் கனவீனம் அடையாமல் இருப்போம் என்று உறுதியாக நம்பினார்.*

*வெளிப்படுத்தப்பட்ட விஷயம் ஒவ்வொன்றும் கடைசியில் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் என்று அவர் நம்பினார். "மகிமைப்படுதல்" என்ற சொற்றொடர் "விரிவாக்கப்படுதல்" அல்லது "பெரிதாக்கப்படுதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும்.[19] முதல் அடியில் இதன் கருத்து நமக்கு வினோதமானதாக உள்ளது. இயேசு ஏற்கனவே "பெரிதைக் காட்டிலும் பெரியவராக" இருக்கிறார் என்பதால், அவரைப் பவுல் எவ்வாறு "விரிவாக்க" அல்லது "பெரிதாக்க" முடியும்? நாம் அதை எவ்வாறு செய்ய முடியும்? "மனிதர்களின் சிந்தைகளில் அவரை நாம் மகிமைப்படுத்த முடியும்" என்பதே பதிலாக உள்ளது. உருப்பெருக்கும் கண்ணாடியானது பொருட்களை மக்கள் அதிகத் தெளிவாகக் காண உதவுவது போலவே, கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்வானது கர்த்தர் உண்மையில் எவ்வாறு இருக்கிறார் என்பதை மனிதகுலம் காண உதவி செய்ய முடியும்.*

*பவுல், "[தமது] சரீரத்தினாலே கிறிஸ்து மகிமைப்படுவாரென்று" நம்பினார். நமது சரீரங்கள் தேவனுடைய ஆலயமாக உள்ளன (1 கொரிந்தியர் 6:19) மற்றும் அவைகள் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் (ரோமர் 12:1). கிறிஸ்து "ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும்" - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் [பவுல்] வாழ்ந்தாலும் இறந்தாலும் - மகிமைப்படுவார் என்று பவுல் நம்பினார். அவர் தமது விசாரணைக்குப் பின்பு அனேகமாக விடுதலை செய்யப்பட்டு விடுவார் என்று நினைத்தார், ஆனால் அவர் எல்லாம் அறிந்தவராக இருக்கவில்லை. என்ன நடந்தாலும் இயேசுவை மகிமைப்படுத்தவே அவர்*

*தீர்மானித்தார்.*

*அவர், தம்மீது குற்றம் சாட்டியவர்களை எதிர்கொண்டபோது, வெட்கம் அடைவதில் இருந்து தவிர்க்கப்பட்டு இருப்போம் என்றும் கர்த்தர் மகிமை அடைவார் என்றும் முன்னெதிர் நோக்கினார். இந்த விளைவுகளுக்காக தாம் நன்மதிப்புப் பெற அவர் திட்டமிட்டு இருந்தாரா? இல்லை. மூல வசனத்தில், "வெட்கப்படுதல்" மற்றும் "மகிமையடைதல்" ஆகிய இரண்டுமே எதிர்கால* செயப்பாட்டு வினையில் *உள்ளன. இந்த செயப்பாட்டு வினையானது, வாக்கியத்தின் எழுவாயினால்* செய்யப்பட்ட *விஷயத்தைக் குறிக்கிறது. விரும்பத் தக்க விளைவிற்குப்* பவுல் தாம் *பொறுப்பாளியாக இருப்பதாக நம்பவில்லை; தேவனே அதற்குப் பொறுப்பாளியாக இருப்பார் என்று அவர் நம்பினார்.*

*வாழ்வைப் பவுல் கண்ணோக்கியது போன்று நாம் கண்ணோக்கினால், நமக்கு என்ன நடந்தாலும், எல்லாம் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்று நாம் நம்புவோம். தேவனுடன் நமது உறவு சரியானதாகவும் நமது சிந்தை /எண்ணப்போக்கு சரியானதாகவும் இருந்தால், தேவன்* நிச்சயமாகவே *எல்லாவற்றையும் நமது நன்மைக்கு ஏதுவாகவே திருப்புகிறார் (காண்க ரோமர் 8:28). இது நமது இருதயத்திற்கு எவ்வளவு சமாதானத்தைக் கொண்டு வரக்கூடும்!*

## முடிவுரை

*பவுல் தமது "எலுமிச்சம்பழங்களைக்" கொண்டு "எலுமிச்சம் பழச்சாற்றை" செய்யக் கூடியவராக இருந்தார். இது எனக்கு, வாழ்வையும் அதன் பிரச்சனைகளையும் பவுல் கண்ணோக்கியது போலவே கண்ணோக்கக் கற்றுக்கொள்ள உதவுமா? நான் இந்தப் பாடத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது, யாரோ ஒருவருக்கு நான், "பவுல் எனது காதுகளில், 'ரோப்பர் உன் சிந்தையை மேம்படுத்திக்கொள்!' என்று கிசுகிசுப்பது போன்று தனிப்பட்ட உணர்வைக் கொண்டுள்ளேன்" என்று கூறினேன். இதை முடிக்கும் வேளையில், அது ஒரு கிசுகிசுப்பு அல்ல, ஆனால் உரத்த குரலாக இருந்தது என்று நான் முடிவு செய்தேன்! நான் எனது சிந்தையின் மீது செயல்பட வேண்டியதாக உள்ளது. உங்களைப் பற்றிய விஷயம் என்ன?*

## குறிப்பு

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் ஒரு அழைப்பை உள்ளடக்குங்கள். நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, "*கர்த்தரைப் பற்றிய *உங்கள் சிந்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நீங்கள் அவரை நேசித்து அவர் மீது நம்பிக்கை வைக்கிறீர்களா? அப்படியென்றால், நீங்கள் அவரது சித்தத்தின்படி செய்வீர்கள் (யோவான் 14:15; மாற்கு 16:16)" என்று கூறலாம்.*

---

*குறிப்புகள்*

[1]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 22. [2]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words*, ed. John R. Kohlenberger III with James A.

Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 468. [3]Ibid. [4]Barclay, 20; Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 35; Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 53; Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 67. [5]நீங்கள் வாழும் இடத்தைப் பொறுத்து, நீங்கள் அனேகமாக இதற்கு ஒரு விவரிப்பை கண்டறிய முடியும். இரண்டாம் உலகப் போரில், கடல் தேனீக்கள் என்ற அழைக்கப்பட்ட படைப்பிரிவினர் (தற்காலிகப்பாலங்கள் மற்றும் வான்வெளிக் களங்கள் கட்டுதல் உட்பட) அமெரிக்கப் படைக்கு வழியைத் தயார் செய்வதற்காகச் சென்றனர். மற்றவர்கள் பின்பற்றி வர ஏதுவாக, காட்டினூடே ஒரு பாதையைச் சுத்தம்செய்தல் என்பது இன்னொரு விவரிப்பாக இருக்கலாம். [6]இந்தப் பத்தியில் உள்ள தகவல்கள் Wilbur Fields, *Philippians - Colossians - Philemon* (Joplin, Mo.: College Press, 1969), 27; Malone, 36; and Barclay, 21 என்ற புத்தகம் உட்படப் பல்வேறு ஆதாரவளங்களில் இருந்து திரட்டப்பட்டவையாகும். [7]அநேகமாக, 2,920 வெவ்வேறு போர் வீரர்கள் வருவதற்கு மாறாக திரும்பத் திரும்ப வந்த போர்வீரர்களே வந்திருக்கலாம். அப்போஸ்தலர் மற்றும் அவரது போதனையினால் மனம் ஈர்க்கப்பட்டவர்கள், சுழற்சி அடிப்படையில் பவுலைக் காவல் செய்யும் பணிக்குத் தங்களை நியமிக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கலாம். [8]தனிச்சிறந்த சுவிசேஷப் பிரசங்கியார்கள் ஆன பெரும்பான்மையான பையன்களைக் கொண்ட பெரிய குடும்பங்கள் பலவற்றை நான் அறிந்திருக்கிறேன். ஒருவேளை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "கட்டுகள்" ஒவ்வொன்றிற்கும் நீங்கள் விவரிப்புகள் கூறுதலைப் பற்றிச் சிந்திக்க முடியும். [9]Quoted in Malone, 37. [10]Ibid.

[11]KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் 16 மற்றும் 17ம் வசனங்கள் இடம் மாறியுள்ளன. கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரமானது NASB வேதாகமத்தின் வரிசை முறைக்கே ஆதரவு அளிப்பதாக உள்ளது, ஆனால் வரிசை முறைமை என்பது இவ்வசனப் பகுதியின் அர்த்தத்தை மாற்றுவதில்லை. [12]இது, ரோமருக்கு எழுதிய நிருபம் கி.பி. 57ன் வசந்த காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என்றும் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் ரோமாபுரியில் பவுல் முதன்முறை சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தின் கடைசிப் பகுதியில், அதாவது கி.பி. 62ல் எழுதப்பட்டிருக்கும் என்றும் யூகிக்கிறது. [13]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 166. General information in this paragraph came from Barclay, 23. [14]D. A. Hayes, quoted in James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 269. [15]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians*, The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 68. [16]Barclay, 26. மற்ற விளக்கங்கள், "தலையைத் திருப்புவதைக் கவனித்தல்" (Harrell, 70) மற்றும் "ஒரு குறிக்கோள் அல்லது ஒரு இலக்கின் மீது தலையைத் திருப்பி ஒருவரின் அவயவங்கள் விருப்ப நோக்கத்துடன் கவனம் குவித்தல்" (Malone, 39) என்பவற்றை உள்ளடக்குகின்றன. [17]Harell, 68; Wiersbe, 69. [18]Barclay, 24. [19]Harell, 70.